# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2194 - 2020 සැප්තැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2020.09.18

*2194 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1206 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1211 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1209 | ஏல விற்பனைகள் | 1214 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

## பெறுகை அறிவித்தல்

## கீழ் மாவட்டத்திற்கு வழித்தட சரளைக் கற்கள் 3,850 கனசதுரங்களை வழங்குவதற்கான பெறுகை

## பெறுகை இல. SRS/ F.7739

01. பின்வரும் இடங்களுக்கு வழித்தட சரளைக் கற்களை வழங்குவதற்காக இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழு ( உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தேசிய போட்டிரீதியிலான விலைமனுக் கோரல் அடிப்படையில் பெற்றுக் கொள்வார். கீழே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித்தனியாக இந்த விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படுகின்றது.

| அம்ச இல. | அமைவிடம் | கியூப் கள் | ஒப்படைக்கும் காலப்பகுதி (மாதங்களில்) |
|---|---|---|---|
| 01. | களுத்துறை தெற்கு | 500 | 04 |
| 02. | புகையிரதம் நிறுத் துமிடம் இல. 01 | 1,000 | 06 |
| 03. | 20 எம். 35 சிஎச். 20 எம் 40 சிஎச் (பிங்வத்த மற்றும் வாத்துவ புகையிரத நிலையங்களுக்கிடையில்) | 500 | 04 |
| 04. | பிங்வத்த (18எம்.60 சிஎச்) | 200 | 02 |
| 05. | பாணந்துறை (புகையிரத பாலத்திற்கு அண்மையில்) | 200 | 02 |
| 06. | மொறட்டுவ புகையிரத திறந்த வெளி | 200 | 02 |
| 07. | அங்குலான புகையிரத நிலையம்- கொழும்பு முடிவு( Colombo End) | 200 | 02 |
| 08. | இரத்மலான புகையிரத நிலையம் | 250 | 03 |
| 09. | நாவின்ன புகையிரத நிலையம் (களனி பள்ளத் தாக்கு வழி) | 300 | 03 |
| 10. | மாலபள்ள (களனி பள்ளத்தாக்கு வழி) | 200 | 02 |
| 11. | வட்டரெக்க (களனி பள்ளத்தாக்கு வழி) | 100 | 01 |
| 12. | லியன்வள (களனி பள்ளத்தாக்கு வழி) | 200 | 02 |

02. மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக 7,000.00 ரூபாவை (ஏழாயிரம் ரூபாவை மாத்திரம்) செலுத்திய பின்னர் 2020.09.23ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணி வரை புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. விலைமனுக்கள் 2020.09.24 ஆந் தியதியன்று பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

04. விலைமனுதாரரர்கள் அவர்கள் விலைமனுவின் ஒரு பகுதியாக 3,00,000.00 இலங்கை ரூபாவை (மூன்று இலட்சம் இலங்கை ரூபாவை) மாத்திரம் விலைமனுப் பிணையாக வழங்கல் வேண்டும்.

05. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்குப் பின்னர் மூடப்பட்டு உடனடியாகவே புகையிரத களஞ்சியசாலைகளின் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுக் களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தாபலில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பப்படலாம். அல்லது அதே முகவரியில் நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,(உயர் மட்டம்)
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.

07. விலைமனுக்கோரல் ஆவணங்கள் புகையிரத களஞ்சிய சாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கலாம்.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 / 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr.@ gmail.com
இணையத்தளம் : www. railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு, (உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பீட்டு இலக்கம்.- SRS/F. 7739

9- 421

## இலங்கைப் புகையிரத சேவைகள்

### பெறுகை அறிவித்தல்

### மத்திய மாவட்டத்திற்கு 6, 450 கியூப் Track Ballast களின் வழங்கல் தொடர்பான பெறுகை

### பெறுகை இல. SRS/ F.7723

01. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் அடிப் படையில் பின்வரும் இடங்களுக்கு Track Ballast வழங் குவது தொடர்பாக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் புகையிரத சேவைகள், திணைக்களப் பெறுகைக்குழு (உயர்மட்டத்திலானது) தலைவர், வழங்குனர்களிடமிருந்து பொறுப்பேற்பார். கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு உருப்படிக்காகவும் இந்த விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கையளிக்கப்படும்.

| உருப் படி இல. | இடம் | கியூப்கள் | ஒப்படைக்கும் காலப்பகுதி (மாதங்களில் ) |
|---|---|---|---|
| 01. | புத்தளம் | 500 | 05 |
| 02. | பாலாவி | 500 | 05 |
| 03. | முந்தல் | 500 | 05 |
| 04. | சிலாபம் | 500 | 05 |
| 05. | காக்கப்பள்ளி | 400 | 04 |
| 06. | குடாவெவ | 400 | 04 |
| 07. | நாத்தாண்டி | 200 | 02 |
| 08. | போலவத்த | 500 | 05 |
| 09. | லேக்சைட், COL பொறித்தொகுதி | 200 | 02 |
| 10. | கொலன்னாவ பொறித்தொகுதி | 250 | 03 |
| 11. | ஒருகொடவத்த கொலன்னாவ புகையிரதப் பாதை | 250 | 03 |
| 12. | ஒருகொடவத்த பொறித்தொகுதி | 250 | 03 |
| 13. | ஜோன் ஹொலன்ட் பொறித்தொகுதி - தெமட்டகொடை | 250 | 03 |
| 14. | ராகம பொறித்தொகுதி | 500 | 05 |
| 15. | போயிஸ் டவுண் - ராகம | 750 | 08 |
| 16. | ஹுணுப்பிட்டி | 500 | 05 |

02. விலைமனுக்கள் ரூ. 12,000 (பன்னிரண்டாயிரம்) மாத்திரமேயான மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் 2020.09.24 ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணி வரை கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. விலைமனுக்கள் 2020.09.25 ஆந் தியதியன்று பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

04.விலைமனுக்கோரும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாறான நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் தொகைக்கான ஒரு விலைமனுப் பிணையானது, விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

05. புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவல கத்தில் மூடப்படும் நேரத்திற்குப் பின்னர் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரார்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுத் திறப்பில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

06. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் நேரடியாக அல்லது பதிவுத் தபாலில் கீழேயுள்ள உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,(உயர் மட்டம்)
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.

07. விலைமனுக்கோரும் ஆவணங்களை புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவச மாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 / 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr.@ gmail.com
இணையத்தளம் : www. railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
(உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

உசாத்துணை இலக்கம்.- SRS/F. 7723

9- 422

---

## இலங்கைப் புகையிரத சேவைகள்

### பெறுகை அறிவித்தல்

### Procurement of 300,000 Nos.Elastic Rail Clips ( Bituminous coated) to Sri Lanka Railways - Procurement No. SRS/ F.7740

01. இலங்கை, கொழும்பு 10,ஒல்கொட் மாவத்தை, புகையிரத தலைமையகம், இலங்கை புகையிரத சேவைகள், திணைக்களப் பெறுகைக் குழுத் (உயர் மட்டம்) தலைவர் 300,000 எண்ணிக்கையான Elastic Rail Clips (Bituminous coated) ஐ நிரந்தரமான வழித்தடத்திற்கான தண்டவாள மீள் பதித்தல் மற்றும் சிலிப்பர்களின் மீள் பதித்தல் ஆகியவற்றின் வழங்கலுக்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக் கொள்வார். விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை நேரடி யாகவோ அல்லது இலங்கையில் பதிவு பெற்றுள்ள தர

அங்கீகாரமுடையவரும் அற்றோணித்தத்துவத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளவர்களும் சமர்ப்பிக்கலாம்.

02. 2020.10.08 ஆந் திகதியன்று இலங்கை நேரம் பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

03. 2020.10.07 ஆந் திகதியன்று இலங்கை நேரம் பி.ப.3.00 மணி வரையும் இலங்கை ரூபாவில் அல்லது இலகுவில் மாற்றக்கூடிய பணத்தொகையில் 12,000 ஐ மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்திய பின்னர் , இலங்கை, கொழும்பு10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04.விலைமனுதாரரர்கள் அவர்களின் விமைனுக்களின் ஒரு பகுதியாக இலங்கை ரூபாவில் 4,50,000 (நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா மாத்திரம்) ஐ அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான தொகைக்கான விலைமனுப் பிணையொன்றை வழங்கல் வேண்டும்.

05.விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரார்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம். அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,(உயர் மட்டம்)
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின்அலுவலகம்,
த.பெ.இல. 1347, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.

07. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரீட்சிக்கப் படலாம் என்பதுடன் மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர் ,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
த.பெ.இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது
94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
(உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

பெறுகை இலக்கம்.- SRS/F. 7740

9- 423

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

**பெறுகை அறிவித்தல்**

Procurement for the supply of 5,000 Nos. Less High Concrete Sleepers to Suit EN 45E1 rails at CME' s Yard - Ratmalana .

Procurements No. SRS/ F.7715

01. 5,000 Nos. Less High Concrete Sleepers to Suit EN 45 E1 rails at CME' s Yard - Ratmalana என்பதன் பெறுகைக்காக உள்ளூர் உற்பத்தியாளர்கள்/ வழங்குனர்களிடமிருந்து இலங்கைப் புகையிரத சேவைகளின் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

02.விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலைப் பெற்ற கீழேயுள்ள முகவரியில் 2020.09.04 ஆந் திகதியிலிருந்து 2020.09.28 ஆந் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புயைிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 /
94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr.@ gmail.com
இணையத்தளம் : www. railway.gov.lk

04.கடந்த ஐந்து வருடங்களில் விலைமனுதாரரானவர் விலைப்பட்டியல்களில் பிரதிகளுடன், இலங்கை புகையிரத சேவைகளுக்கு 5,000 இற்கு மேற்பட்ட கொன்கிறீட் சிலீப்பர்களை வழங்கியிருப்பதுடன் அல்லது 50 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட தொகைக்கு Pre-stressed concrete beams ஐ வழங்கியிருப்பதுடன் அல்லது 500 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதிக்கு Pre-stressed concrete poles ஐ வழங்கியிருத்தல் வேண்டும்.

05.2020.09.04 ஆந் திகதியிலிருந்து 2020.09.24 ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 12,500 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்

களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

06.அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணைத் தொகையானது 500,000.00 ரூபாவென்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை செயற்படும் வங்கியினால் நிபந்தனையற்றதும் இலகுவில் ரொக்கப் பணமாக மாற்றக்கூடியதுமானதாகவிருத்தல் வேண்டும்.

07. 2020.09.29 ஆந் திகதியன்று பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் , உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,(உயர் மட்டம்)
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
(உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

குறிப்பீட்டு இலக்கம்.- SRS/F. 7715

9- 452

---

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் -மட்டக்களப்பு

பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2020.10.01 ஆந் திகதியன்று காலை 9.00. மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டு பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம்மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏ.சீ. ரிஸ்வான்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
2020, ஓகத்து 25.

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்**

| தொ. இல. | வழக்கு இல. | வாகனப் பதிவு இல. | சான்றுப் பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 47431/F/17 | EP RV - 3892 | இழுவைப் பெட்டி (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 |
| 2. | 55596/E/19 | EP BGH - 6191 | மோட்டார் சைக்கிள் | 01 . |
| 3. | 59136/MT/20 | EP UE - 2593 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 4. | 60114/E/20 | EP BIU - 0717 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 5. | 59958/E/20 | EP BAT - 6008 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6. | 60041/E/20 | EP GG - 8293 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7. | 52706/E/18 | | சிலிண்டர் | 01 |
| 8. | 52706/E/18 | | அடுப்புடன் ரெகுலேட்டர் | 01 |
| 9. | AR/420/20 | | வெற்று பரல் | 07 |
| 10. | 52706/E/18 | | வெற்று பரல் | 01 |
| 11. | 55982/S/19 | | குளிர்சாதனப் பெட்டி | 01 |
| 12. | 59381/E/20 | | தலைக்கவசம் | 01 |
| 13. | 60041/E/20 | | தலைக்கவசம் | 01 |
| 14. | 60269/E/20 | | தலைக்கவசம் | 01 |
| 15. | 61350/S/20 | | கத்தி | 01 |
| 16. | 61323/F/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 17. | 61351/S/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 18. | B/232/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 19. | B/232/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 20. | B/232/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 21. | B/232/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 22. | B/232/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 23. | B/232/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 24. | B/232/20 | | காற்றழுத்தி | 02 |
| 25. | B/233/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 26. | B/233/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 27. | B/233/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 28. | B/233/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 29. | B/233/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 30. | B/233/20 | | காற்றழுத்தி | 01 |
| 31. | 61323/F/20 | | வாச்சி | 01 |
| 32. | 34328/PC/15 | | சப்ளயர் | 03 |
| 33. | No Number | | கதவு நிலையுடன் ஜன்னல் | 01 |
| 34. | No Number | | கதவு | 03 |
| 35. | No Number | | கோடரி | 05 |
| 36. | No Number | | மண்வெட்டி | 05 |
| 37. | No Number | | கத்தி | 04 |

| தொ. இல. | வழக்கு இல. | வாகனப் பதிவு இல. | சான்று பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 38. | No Number | | அலவாங்கு | |
| 39. | No Number | | ஆணி | 07 kg |
| 40. | No Number | | கையடக்கத் தொலைபேசி | 01 |
| 41. | No Number | | இரும்புக் குழாய் | 10 |
| 42. | AR/150/12 | | CD Player, Dish Reciever, Camera, Sound Box | |
| 43. | 61109/S/20 | | கோடரி | 01 |

09-366

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

### கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் பிரகாரம் , கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தலை நாம் வழங்குகின்றோம்.-

கம்பனியின் முன்னைய பெயர் : இவோக் இன்டர்நஷனல் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம்: பீவீ 64927
பதிவு அலுவலகம்: 120/ஏ, பார்ன்ஸ் பிளேஸ், கொழும்பு 7
கம்பனியின் புதிய பெயர் : இவோக் இன்டர்நஷனல் லிமிட்டட்

இவோக் இன்டர்நஷெனல் (பிரைவட்) லிமிட்டட் இற்காகவும் அதன் சார்பிலும்,

பி. டபிள்யூ. கோப்பறேட்
செக்ரட்டேரியல் (பிவிரி) எல்ரிடி,
கம்பனிச் செயலாளர்கள்.

2020.08.26.

9- 394

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவித்துக்கொள்கின்றோம்.-

கம்பனியின் பெயர் : ஹானா கன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம்: பீவீ 00207282
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2018.12.19
பதிவு செய்யப்பட்ட முகவரி : 42A, ஆலிம் நகர், மூதூர்-02

அப்துல் கபூர் ரமீஸ்,
கம்பனிச் செயலாளர்.

9- 398

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவித்துக்கொள்கின்றோம்.-

கம்பனியின் பெயர் : ரெய்யான் மோட்டர் சேர்விஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம்: பீவீ 00208626
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.02.17
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 1169, யுனிட் 10, முள்ளிப்பொத்தான, தம்பலகாமம்

மொஹமட் ஜெஸீர் ஷாஹுல் ஹமீட்,
கம்பனிச் செயலாளர்.

9- 399

## சம்பியன் அப்பரல்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல.PV 15262

கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்பு பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : சம்பியன் அப்பரல்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இல.265, பிரதான வீதி, கொழும்பு 11

நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)

வழக்கு இல.: HC (CIVIL)/35/08/CO

கம்பனி கலைப்பாளரின் பெயர்: P. E.A.Jayewickreme & G.J.David

முகவரி: Level 4, No. 2, ( Presently at Level 3,No.11), Castle Lane, Colombo 4

கம்பனி கலைப்பு மற்றும் கலைப்பாளர் விடுவிப்புத் திகதி: 2020.08.06

9- 410

---

## பொதுஅறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஒஜே. எல்கே (பீவீடி) எல்டிடீ

பதிவிலக்கம்: பீவீ 00224976

கூட்டிணைப்புத் திகதி: 2020.07.26

பதிவு முகவரி : 183, "விஜேகிரி", பண்டாரநாயக்க மாவத்தை, கட்டுபெத்த, மொறட்டுவ

கம்பனிச் செயலாளர்.

9- 427

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(1)ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயரானது மாற்றப்பட்டுள்ளது.-

கம்பனியின் பழைய பெயர் : பீ எல் கொம் டெக்னொலொஜீஸ் லங்கா (பிரைவெட்) லிமிட்டட்

பதிவிலக்கம்: பீவீ 00204570

பதிவு முகவரி : இல. 93, 1A,1/1, மெனிங் பிலேஸ், வெள்ளவத்தை, கொழும்பு 6

பதிவு செய்யப்பட்ட திகதி: 2020.07.22

கம்பனியின் புதிய பெயர் : அப்றைட் குலோபல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பீவீடீ) எல்டீடி

பணிப்பாளர் சபை.

9- 461

## பொதுஅறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

1. கம்பனியின் பெயர் : ஹைப்பர் டூல்நஸ் (பிரைவட்) லிமிட்டட்
   பதிவிலக்கம்: பீவீ 123394
   கூட்டிணைப்புத் திகதி: 2017.06.27
   பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.23, 05 ஆம் ஒழுங்கை, இரத்மலான

2. கம்பனியின் பெயர் : இமென்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
   பதிவிலக்கம்: பீவீ 123397
   கூட்டிணைப்புத் திகதி: 2017.06.27
   பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.23, 05 ஆம் ஒழுங்கை, இரத்மலான

3. கம்பனியின் பெயர் : இமென்ஸ் லான்ட் என்ட் புறொபர்ட்டி டிவெலொப்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
   பதிவிலக்கம்: பீவீ 123416
   கூட்டிணைப்புத் திகதி: 2017.06.27
   பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.23, 05 ஆம் ஒழுங்கை, இரத்மலான

4. கம்பனியின் பெயர் : இமென்ஸ் குரூப் ஒப் கம்பனீஸ் (பிரைவட்) லிமிட்டட்
   பதிவிலக்கம்: பீவீ 123403
   கூட்டிணைப்புத் திகதி: 2017.07.05
   பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.23, 05 ஆம் ஒழுங்கை, இரத்மலான

5. கம்பனியின் பெயர் : ஈ- மார்ட் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்
   பதிவிலக்கம்: பீவீ 123396
   கூட்டிணைப்புத் திகதி: 2017.06.27
   பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.23, 05 ஆம் ஒழுங்கை, இரத்மலான

9- 582

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாறவில, தல்வில, குனசெவனயில் வசிக்கும் ஜயலத் பெடிகே வீனஸ் அப்சரா ரணசிங்ஹ (தே.அ.அ.இல. 765160294V) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறியத்தருவது யாதெனில் மாறவில, தல்வில, குனசெவனயில் வசிக்கும் மிஹிந்துகுலசூரிய டிலிப் ரோஹித லிவேரா ( தே.அ.அ.இல. 602702677V) என்ற நபருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை பிரசித்த நொத்தாரிசு டிலானி பி. மாரசிங்ஹ அவர்களால் 2013 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 26 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 4818 ஆம்

இலக்கத்தைக் கொண்ட அற்றோணித்தத்துவ ஆவணத்தில் 67 ஆம் அத்தியாயத்தில் 4731 ஆம் பதிவேட்டில் 2459 ஆம் தினக்குறிப்பேட்டின் கீழ் எழுதி பதிவு செய்யப்பட்டதுமான அற்றோணித் தத்துவப் பத்திரம் இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும், இப்பொழுது முதல் மிஹிந்துகுலசூரிய டிலிப் ரோஹித லிவேரா என்பவரால் எனக்காகவோ அல்லது எனது பெயரின் மூலமாகவோ செய்யப்படும் எந்த ஒரு செயற்பாடுகளுக்கோ கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என்றும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

ஜயலத் பெடிகே வீனஸ் அப்சரா
ரணசிங்ஹ.

9- 370

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய இராச்சியம், EN2 7EN , கிளாட்பெக் வே என்வீள்ட் இலக்கம் 96, (of No.96, Gladbeck Way ENFIELD , EN2 7EN United Kingdom) எனும் இடத்தை வசிப்பிடமாகக் கொண்டுள்ள பத்ம ஆரியதாசா ஆகிய நான், கொழும்பு பிரதான நீதவான் K.P.D. கொடிபிலி அவர்களால் 2015 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட இலக்கம் 23, மெல்டர் வீதி, நுகேகொடயை வசிப்பிடமாகக் கொண்ட திரு. டெரன்ஸ் ஹேமசிறி வீரகோனின் ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 56144068V) விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்யப்பட்டு தடை செய்யப்படுகிறது.

இதனால் அற்றோணித் தத்துவதாரரான டெரன்ஸ் ஹேமசிறி வீரகோன் அவர்கள் இன்று முதல் என்னுடைய பொறுப்பில் இல்லை என்றும் இவரால் எடுக்கப்படும் எந்தவொரு சட்ட நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளி அல்ல என்றும் இத்தால் அறிவிக்கின்றேன்.

பத்மா ஆரியதாச.

கொழும்பு ,
2020, ஆனி மாதம் 12.

9- 391

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

அம்பலாந்தோட்டை, ருஹுணு ரிதியகம 5 ஆம் மைல் போஸ்ட் எனும் முகவரியில் வசிக்கும் ஜயவர்தன விதான ஆரச்சிகே லக்ஷமன் நாலக்க ஆகிய நான், (தே.அ.அ.இல. 712730820V) , தலாத்துஓய, சிங்ஹலெனே, இல. 183 எனும் முகவரியில் வசிக்கும் ஜயசிங்ஹ முதியான்சேலாகே உதய சான்த லால் ஜயசிங்ஹ (தே.அ.அ.இல. 613250069V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு ஆர். டீ.பந்துல என்பவரால் 2020.05.30 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1683 ஆம் இலக்கமுடைய அற்றோணித்தத்துவப் பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக மற்றும் அற்றோணித்தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

ஜயவர்தன விதான ஆரச்சிகே லக்ஷமன் நாலக்க.

9- 426

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பண்டாரவளை, கினிகம, இல. 1/1 எனும் முகவரியில் வசிக்கும் செனெவிரத்ன விஜேகோன் அஜித் சுசந்த ஜயவிக்கிரம (தே.அ.அ.இல. 632861109V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு எல். ஏ.எம். நிமல் அபேசிங்ஹ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.09.14 ஆந் திகதிய 1815 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தினால் வெலிமட, நுகதலாவ, உடுமுல்ல வத்த, எனும் முகவரியில் வசிக்கும் கலஹே லியனகே சுதந்த ரத்னாயக்க ( தே.அ.அ.இல. 690141965V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் 2020.08.26 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செனெவிரத்ன விஜேகோன் அஜித் சுசந்த
ஜயவிக்கிரம .

9- 428

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிரதான வீதி, தம்பிலுவில்-02, அம்பாறை மாவட்டம், கணபதிப்பிள்ளை தயாராணி (தேசிய அடையாள அட்டை இலக்கம் 688422302V) ஆகிய நான், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, A.H. சமீம் அவர்களால் 2012.08.08 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட 4280 ஆம் இலக்கமுடைய பொது அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் மூலம் பிரதான வீதி, தம்பிலுவில்-01, அம்பாறை மாவட்டம், கணபதிப்பிள்ளை, ஞானலிங்கம் (தேசிய அடையாள அட்டை இலக்கம் 571501406V) என்பவரை எனது பொது அற்றோணித்தத்துவகாரராக நியமித்திருந்தேன். தற்போது குறித்த பொது அற்றோணித்தத்துவப் பத்திரத்தை 2020.08.20 ஆந் திகதி இரத்துச் செய்துள்ளேன் என்றும் இதன்படி கணபதிப்பிள்ளை ஞானலிங்கம் என்பவரால் எனது சார்பாக குறித்த பொது அற்றோணித்தத்துவப் பத்திரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் எந்த செயலும் செல்லுபடியற்றதாகும் எனவும் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவிக்கின்றேன்.

9- 434

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்வதாவது, இல. 8866 ஐ உடைய, 2015, யூன் 09 ஆந் திகதியிடப்பட்ட, குளியாப்பிட்டி பிரசித்த நொத்தாரிசு பந்துல விஜேசிங்க மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட குருநாகல் வடமேல் மற்றும் வடமத்திய மாகாண பிராந்திய அலுவலகத்தால் பராமரிக்கப்படும் அத்தியாயாம் 84, இருமடித்தாள் 6374, பதிவு 1689, 2015, யூன் 16 ஆந் திகதியிடப்பட்ட எழுத்து மூல அதிகாரப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்ட நாத்தாண்டிய, குட்செட் வீதியைச் சேர்ந்த திஸாநாயக்க லெக்கமாலகே மனோஜ் துஷார திஸா நாயக்க (781372447V இலக்க தேசிய அடையாள அட்டை உரித்தாளர்) பெயரில் இலங்கை, நாத்தாண்டியா,குட்செட் வீதியைச் சேர்ந்த திஸாநாயக்கா லெக்கமாலகே சத்துரங்க திஸாநாயக்கா (822343597V இலக்க தேசிய அடையாள அட்டை உரிமையாளர்) ஆகிய என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டு மற்றும் இல்லாதொழிக்கப்படுவதுடன் மேற்படி அற்றோணித் தத்துவத்தின் கீழாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாடு மற்றும் கருமங்களுக்கும் நான் பொறுப்பாக இருக்க மாட்டேன் என்பதாகும் .

9- 459

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 136, 5 ஆம் கொலனி, சியம்பலாண்டுவ எனும் முகவரியைச் சேர்ந்த கலபட தனுஷ்க புனர்ஜீவன பெர்னாந்து ஆகிய நான், கடந்த 2014.12.30 ஆந் திகதி கண்டி வலய பிரசித்த நொத்தாரிசு ஹஷந்தி ரேணுகா வெலிகல என்பவர் அத்தாட்சிப்படுத்திய 155 ஆம் இலக்க அற்றோணி தத்துவப்பத்திரத்தின் மூலம் இலக்கம் 02, கண்டி வீதி, கெங்கல்ல எனும் முகவரியைச் சேர்ந்த திரு. இந்திக ரோஷான் ஜெயரத்ன என்பவரை எனது அற்றோணித் தத்துவகாரராக நியமித்திருந்தேன். மேற்குறித்த 155 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப் பத்திரத்தை நான் இன்று முதல் இரத்துச் செய்கின்றேன் என்றும் இதன் பின்னர் குறித்த அற்றோணித் தத்துவப்பத்திரம் எவ்விதத்திலும் சட்ட வலிதற்றது என்பதையும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நாட்டு மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

கலபட தனுஷ்க புனர்ஜீவன பெர்னாந்து .

9-643

# ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

சிவி மெக் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0127 1000 2477

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2018.09.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2018.10.19 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2018.10.12ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதின்மூன்று கோடியே முப்பத்திரண்டு இலட்சத்து பத்தாயிரத்து எண்ணூற்று பதின்மூன்று ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூபா 13,32,10,813.45) 2018, செத்தெம்பர் 12 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பன்னிரெண்டு கோடியே அறுபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்தி எட்டாயிரத்து முந்நூற்று பதினைந்து ரூபா தொண் ணூற்றி மூன்று சதம் (ரூபா 12,68,58,315.93) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு வீதம் (2%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.10.28 ஆந் திகதி மு.ப. 10.30 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லே பத்துவின் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் தெஹிவளை மேற்கு கிராம அலுவலர் பிரிவின் எல்லைகளுக்குள் தெஹிவளை – கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைகளுக்குள் தெஹிவளை மேற்கு வோட் இல. 8, தெஹிவளையில் அமைந்த ராமநாதன் அவனியூ

வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 12 மற்றும் 14 ஐ ஏற்ற அலுத்வத்த என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. வீ. எம். டப்ளியூ. சமரநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, சனவரி 3 ஆந் திகதியிடப்பட்ட இல. 5359A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 தெஹிவளை எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : லொட்கள் 1526, 2704 மற்றும் 2706 (ராமநாதன் அவனியூ வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 8C, 8B மற்றும் 8) ; கிழக்கு: ராமநாதன் அவனியூ; தெற்கு : இனிடியும் வீதி ; மற்றும் மேற்கு : லொட் 3906 (இனிடியூம் வீதி வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 34 மற்றும் 34A மற்றும் லொட் 1225 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் மூன்று தசம் நான்கு ஏழு பேர்ச் (0ஏ. 1றூ. 3.47பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5359 A எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

இல. 5359A எனும் வரைபடத்தில் பதிவு வரைபட இல.1– தெஹிவலை இல் காட்டப்பட்ட கூறப்பட்ட லொட் 5969, இல. 5359 எனும் வரைபடத்தின் லொட்கள் 5969 மற்றும் 5970 என்பவற்றின் ஒன்றிணைப்பும் மீள் அளவீடுமாகும் இது கீழ் கண்டவாறு நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ளது.

1. மேற்கூறப்பட்ட தெஹிவளை மேற்கு வோட் இல.8, தெஹிவளையில் அமைந்த ராமநாதன் அவனியூ வரிமதிப்பீட்டு இல. 12 ஏற்ற "அலுத்வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. வீ. எம். டப்ளியூ. சமரநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, ஏப்பிறல் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 5359 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5969 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: லொட்கள் 1526, 2704 மற்றும் 2706 (ராமநாதன் அவனியூ வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 8C, 8B மற்றும் 8 ) ; கிழக்கு: ராமநாதன் அவனியூ ; தெற்கு : லொட் 5970 மற்றும் 3906 (இனிடியூம் வீதி வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 34 மற்றும் 34A); மற்றும் மேற்கு : லொட் 3906 (இனிடியூம் வீதி வரிமதிப்பீட்டு இலக்கங்கள். 34 மற்றும் 34 A) மற்றும் லொட் 1225 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது தசம் மூன்று சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 20.30 பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5359 A எனும் வரைபடத்திற்கு அமைவாக தெஹிவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் Dehi 112/32 & 33 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கூறப்பட்ட தெஹிவளை மேற்கு வோட் இல.8, தெஹிவலையில் அமைந்த ராமநாதன் அவனியூ வரிமதிப்பீட்டு இல. 14 ஏற்ற "அலுத்வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.வீ.எம்.டப்ளியூ சமரநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2013, ஏப்பிறல் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 5359 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 5970 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : லொட் 5969; கிழக்கு : ராமநாதன் அவனியூ ; தெற்கு: இனிடியூம் வீதி ; மற்றும் மேற்கு : லொட் 3906 (இனிடியூம் வீதி வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 34 மற்றும் 34A) ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி மூன்று தசம் ஒன்று ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 23.17பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5359 மற்றும் லொட் 5970 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெஹிவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் Dehi 112/34 & 35 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

9-467

---

## டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ
## களனி, கோனவல, கல்ஏதண்ட கிராமத்தில் அமைந்துள்ள மதிப்பீட்டு இல. 259 உடைய பெறுமதிமிக்க காணியொன்றின் ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்*

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியன கோரளை, அதிகாரிபத்துவில் பியகம பிரதேச செயலாளர் பிரிவு, பியகம பிரதேச சபை எல்லையில் பியகம கிராம அலுவலர் பிரிவிற்குள் கல்ஏதன்டா கிராமத்தில் அமைந்துள்ள "ஹல்கஹவத்த மற்றும் மீகஹவத்த" என்றழைக்கப்படும் 2015, ஓகத்து 10 ஆந் திகதியன்று உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் டி. சி. எம். எஸ். விமலரத்னவினால் மேற்கொள்ளப்பட்ட 134/2015 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் B3V என சித்தரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்டு பிரிவிட்டு பிரித்துக் கொடுக்கப்பட்ட காணிக்கூறு முழுவதும் அதனுட்பட்டவைகளும்.

டீ.எப்.சீ.சீ. வங்கி சார்பாக பிரசித்த நொத்தாரிசு றுவான்தி பொன்சேகா ( டீ. எப். சீ. சீ. வர்தன வங்கி பீஎல்சீக்காக பின் தொடர்பவர்) வினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், 2017, யூன் 28 ஆந் திகதியிடப்பட்டதுமான 1247 ஆம் இலக்க அடமானப்

பத்திரத்தின் பிரகாரம் வங்கியில் கடன்பெற்றவரான ஜெயசூரிய ஆராச்சிகே அந்தோனி தினுக்க ஜயந்த டி சேரம் உரிய முறையாக கொடுப்பனவைச் செலுத்தத் தறியுள்ளார்.

டீ. எப். சீ. சீ. வங்கி பீஎல்சீயினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் (0ஏ.0றூ.33.50பே.) முப்பத்தி மூன்று தசம் ஐந்து பூச்சியம் பேர்ச் விசாலத்துடன் கூடிய காணியும் அதனுடன் கூடிய கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள சகலவையும். 2020ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி காலை 10.30 மணியளவில் குறிப்பிட்ட இடத்தில் பொது ஏல விற்பனை மூலமாக விற்பனை செய்யப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: இலங்கை அரசாங்கத்தினால் 2020.07.10 ஆந் திகதியுடைய வர்த்தமானி, 2020.06.25 ஆந் திகதியுடைய தினசரி திவயின, த ஐலன்ட், மற்றும் 2020.06.26ஆந் திகதியுடைய தினக்குரல் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் சென்றடையும் வழி**: கொழும்பிலிருந்து புறப்பட்டு, கொழும்பு - கண்டி பாதை நெடுகிலும் பயணிக்கவும். ஏறக்குறைய 600 மீற்றரைக் கடந்ததும் 11 ஆவது கிலோ மீற்றர் போஸ்ட் வலது பக்கம் ஆர். எஸ். பெரேரா மாவத்தை வலது பக்கம் திரும்புகிறது. ஏறக்குறைய 200 மீற்றர் முன்னகர்ந்து இடது பக்கம் கொஹொல்வில, வீதிக்குத் திரும்பவும். 1.2 கிலோமீற்றர் தூரத்திற்கு எட்டாஹெரலியகஹமுல்ல சந்தி வரையில் முன் செல்லவும். இடது பக்கம் கல்ஏதண்ட வீதிக்குத் திரும்பவும். 600 மீற்றர் முன்சென்று 15 அடி பிரதேச சபை வீதிக்கு வலது பக்கம் திரும்பவும். அங்கு வலது பக்கமுள்ள குறித்த ஆதனமுள்ள இடத்துக்கு 200 மீற்றர் முன் நகரவும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்** : உத்தேசக் கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் தொகையை பணமாக ஏலதாருக்குச் செலுத்த வேண்டும்:

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ;
(2) உள்ளூர் அதிகார சபை அறவீடுகள் (1%) ;
(3) தரகின் ஏற்புடையதான ஏல விற்பனையாளர் அறவீடுகள் மற்றும் வரிகள் 2 1/2 %;
(4) விளம்பர அறவீடுகள் பற்றிய மொத்த செலவு ;
(5) லிகிதர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 1500.00;
(6) விற்பனை தொடர்பான நிபந்தனைகளை அத்தாட்சிப் படுத்தியமைக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3,000.00 மற்றும் விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைத் தீர்வை போன்றவை.

கொள்விலையில் மிகுதி 90% ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வேறு ஏதேனும் சட்டப்படியான வரிகள் தீர்வைகள், வரிகள் அல்லது ஏற்புடைய ஏதேனும் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்படும் அல்லது வேறு ஏதேனும் தீர்வைகள் செலுத்தப்பட வேண்டும்.

உரித்துறுதிப் பத்திரங்களையும் மற்றும் ஏனைய ஆவணங் களைப் பார்வையிட தொடர்பு கொள்ள வேண்டியது- பொதுசன முகாமையாளர், புனர்வாழ்வு மற்றும் கடன் மீட்பு, டீ.எவ்.சீ.சீ. வங்கி பீஎல்சீ, இல. 73, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02 இல் பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

தொ. பே. இல. : 011-2371371.

பீ.கே.ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர் ,
மதிப்பீட்டாளர்,
பட்டயம் பெற்ற விற்பனையாளர்.

134, பெத்தகான வீதி, கோட்டை.
தொ. பே. இல.: 2873656, 0777- 672082.
தொலைநகல் இல.: 2871184.
24 மணிநேரம் தொடர்பு நிலையம்: 0112-350000.

9- 400

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ —குண்டசாலை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை

**மிகவும் பெறுமதிமிக்க வியாபாரச் சொத்து, கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நத்தரம்பொத 684 கிராம அலுவலர் பிரிவில் நத்தரம்பொத எனும் கிராமத்தில் அமைந்துள்ள "தம்பகஹவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் C.D. ஆதிஹெட்டி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.01.08 ஆந் திகதிய 5940ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மாடிக் கட்டிடமும், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 27.46 பேர்ச். பரப்பளவானது.**

**இவ்வாதனம் விஜயகுமார் வினோதினி மற்றும் பாலச் சந்திரன் செந்தில் குமார் ஆகியோர் கடப்பாடுடை யவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**ஆதனத்தை வந்தடைதல்.** - கண்டி நகர மத்தியிலிருந்து மஹியங்கனை பாதையில் சுமார் 4.25 கி.மீ. தூரம் நத்தரம்பொத அரங்கல பாதை சந்தி வரை வந்து இடது பக்கமாக திரும்பி மெனிக்ஹின்ன 626 ஆம் பாதைக்கு பிரவேசித்து அப்பாதையில் சுமார் 50 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் வலதுபக்கத்தில் பாதையின் எல்லையில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

கீழ் விபரிக்கப்பட்ட ஆதனத்தை 2020.10.29 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- 2018.07.06 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.07.13 ஆந் திகதிய "லக்பிம", "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப் பனவுகள் ரொக்கமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000.00 ரூபா.

கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு : சிரேஷ்ட பொது முகாமையாளர், (வர்த்தக அறவிடுதல்) பிரிவு ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, ரி.பி.ஜாயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 011-2661835, 011- 2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2210595, 071-8446374, 071-4962449.

9- 439

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. - கல்கமுவ கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை*

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் மற்றும் பதிவுப் பிரிவு, ஹெல்கொட எகொட கோரளை, ஹிரியால ஹத்பத்துவ, கனேவத்த பிரதேச செயலாளர் பிரிவு இப்பாகமுவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தம்பகல்ல இல. 445 , கிராம அலுவலர் பிரிவில் தம்பகல்லயில் அமைந்துள்ள "பஹலமுகலான மற்றும் வத்துயாய" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் A.S.K. பரனகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.12.25 ஆந் திகதிய 2014 / 150ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும் . இது 1 ஏக்கர் , 02 றூட், 23.5 பேர்ச்சஸ் பரப்பளவானது.

இவ்வாதனம் J.S. டிரேடிங் எனும் பெயர் மகுடத்தின்கீழ் தனி உரிமையாளராக வியாபாரத்தை நடாத்திச் செல்லும் சேனாநாயக்க அமரசிங்ஹ மொஹொட்டி அப்புஹாமிலாகே ஜயவங்ஷ என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ .இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல் :** குருநாகலையிலிருந்து தம்புள்ளை பாதையில் சுமார் 2. கி.மீ. தூரம் முத்தெட்டுகல சந்தி வரை வந்து இடதுபக்கமாகவுள்ள ஹிரிபிட்டிய பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 18.4 கி.மீ. தூரம் சென்று ஹிரிபிட்டிய குறுக்குப் பாதை சந்தியில் இடதுபக்கமாகத் திரும்பி வாரிய பொல பாதைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 2.3 கி.மீ. தூரம் சென்று கனேவத்த வரை வந்து வலதுபக்கமாக திரும்பி கெக்குலாவல பாதையில் சுமார் 05 கி.மீ. தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் இடதுபக்கத்தில் தம்பகல்ல சந்தியில் அமைந்துள்ளது.

2020.10.16ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**-2019.04.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.05.06ஆந் திகதிய மவ்பிம , டேலி மிரர் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**: விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்:-

1. கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
2. பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
3. ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை);
4. சகல பகிரங்கப்படுத்தல் செலவு;
5. இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ.1000 .00;
6. நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் .

கொள்முதலில் மிகுதி 90% மற்றும் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு: சிரேஷ்ட முகாமையாளர் (கடன் அறவிடுதல் ) ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ , இல. 479, T.B. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி : 011-2661835, 011-2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏல
விற்பனையாளர்.

இல. 369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட, கண்டி
தொலைபேசி: 081-2210595, 071-8446374, 071-4962449.

9- 436

---

### மக்கள் வங்கி - மொணராகலைக் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி எனும் பிரிவின் கீழ் ஏல விற்பனை அறிவித்தல்

ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டத்தில் சியாம்பலாண்டுவ பிரதேச சபை எல்லைக்குள் மஹாவெதிரட்ட கோரளையின் மடுகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் “துண்முலேயாய வத்த” எனவழைக்கப்படும் காணியினதாய் 2016.06.20 ஆந் திகதிய 2754 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக் காட்டப்பட்ட காணித்துண்டம் இல. 01 இன் பாகத்தை நான் விற்பனை செய்வேன்.

பரப்பளவில் இது அதன்மீதுள்ள மரங்கள், இலைகுலை, பழங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து (0ஏ.02றூ.04பே.) என்பதைக் கொண்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவத்தின் கீழ் 2020 ,ஒற்றோபர் 08 ஆந் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு ஆதனத்தையும் வளவையும் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

**தீர்மான அறிவித்தலுக்கு:** 2018.08.10 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும், 2018.08.09 ஆந் திகதிய தினமின பத்திரிகையிலும், 2018.08.09 ஆந் திகதிய டெய்லி நியுஸ் பத்திரிகையிலும், 2018.08.09 ஆந் திகதிய தினகரன் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்களுக்கு கவனம் செலுத்தவும்.

**ஆதனத்திற்கு செல்வதற்கான வழி.-** சியம்பலாண்டுவ நகரத்திலிருந்து மொணராகலை வீதியில் 600 மீற்றர் தூரம் சென்றவுடன் நவ மெடிக்கல் சென்டர் கட்டிடத்தின் முன்னால் உள்ள அந்த வீதியின் இடது பக்கத்தில் இந்தக் காணி மற்றும் கட்டிடம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏல விற்பனையின் முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளரால் கீழ்க் குறிப்பிடப் பட்டவாறு பணம் செலுத்தப்பட வேண்டும். :-

(1) கொள்வனவு விலையின் 10% ( பத்து வீதம்);
(2) மாகாண அதிகார சபைக்குச் செலுத்தப்படற்பாலதான 1% வரி ;
(3) ஏல விற்பனையாளரின் தரகாகக் கொள்வனவு விலையின் 2 1/2 % ( இரண்டரை சதவீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் வெளியிடுதற் கட்டணமாக 1,000 ரூபா ;
(5) விற்பனையின் மொத்த ஆகுசெலவும் ஏனைய விதிப்பனவுகளும், எவையேனுமிருப்பின் ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைத் தீர்வை.

கொள்வனவு விலையில் 90% பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் மொணராகலைக் கிளையில் மக்கள் வங்கியின் பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய முகாமையாளருக்குச் செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி இல. : 055- 2217105, 055-2276347.

உரித்துறுதிகளும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களும் மேற்படி முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படலாம்.

கொடுப்பனவுகள் மேற்கூறப்பட்டவாறு 30 நாட்களினுட் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சத வீதத்தை வங்கி செலுத்தாதிருந்து ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

டபிள்யூ. எம். ஐ.கல்லெல்ல,
நீதிமன்ற ஆணையாளர்,
உரிமம் பெற்ற
ஏலவிற்பனையாளரும்,
பெறுமதி மதிப்பீட்டாளரும்,

இல. 28,
புதிய சட்டத்தரணிகள் மற்றும்
வியாபாரக் கட்டிடத் தொகுதி,
